பேராயர்கள், அருட்தந்தைகள் மற்றும் அருட் சகோதரிகளுக்கு

# முதல்வர் மு.க.ஸ்டாலின் கிறிஸ்துமஸ் வாழ்த்து!

## சிறுபான்மையினருக்கு பல்வேறு சீரிய திட்டங்கள் நிறைவேற்றி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்குப் பாராட்டு!

சென்னை, டிச. 25 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு, கிறிஸ்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம். கரூர், மதுரை, தேனி ஆகிய மாவட்டங்களில் கூடுதல் கிறிஸ்தவ மகளிர் உதவி சங்கங்கள் தொடக்கம், ஜெருசலேமுக்கு புனிதப் பயணம் செல்வதற்கான நிதியுதவி உயர்வு, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அதிகக் கடன்கள், தமிழ்நாட்டில் உள்ள தொன்மையான கிறித்தவ தேவாலயங்கள் பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ள அரசு நிதியுதவி, கிறித்தவர்களுக்கான கல்லறைத் தோட்டங்களில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள அரசு நிதியுதவி, சிறுபான்மையினர் கல்வி நிறுவனங் களுக்கு, சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ் பெறுவதை எளிதாக்கும் வகையில் தலைமைச் செயலாளர் தலைமையில் அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுவின் (Empowered Committee) ஒப்புதல் பெற்று, சான்றிதழ்கள் விரைவாக வழங்கப்பட்டு வருவது போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

சிறுபான்மையின மக்களின் காவலராக விளங்கி வரும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.12.2024) முகாம் அலுவலகத்தில், கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி, சிவகங்கை மறைமாவட்ட பேராயர் டாக்டர் லூர்து ஆனந்தம், கும்ப கோணம் மறைமாவட்ட பேராயர் டாக்டர் ஜீவானந்தம், சியோன் மலபார் பேராயர் டாக்டர் செபாஸ்டின், TAMCO தலைவர் வழக்கறிஞர் பெர்னான்டஸ் ரத்தின ராஜா, சி.எஸ்.ஐ. மதுரை - இராமநாதபுரம் மறைமாவட்ட பேராயர் அருட்தந்தை டாக்டர் ஜெய்சிங் பிரின்ஸ் பிரபாகரன், சி.எஸ்.ஐ. சென்னை மறைமாவட்ட ஆயர் பால் பிரான்சிஸ், கவுரவ செயலாளர் அருட்தந்தை அகஸ்டின் பிரேம்ராஜ் உள்ளிட்ட தென்னிந்திய திருச்சபை பேராயர்கள், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் உறுப்பினர் ஹாமில் டன் வில்சன், அருட்தந்தையர்கள் இருதயம், கனிகைராஜ், ஜோசப் மாணிக்கம், அருட்சகோதரிகள் ஞான செல்வம், அருள் சீலி, தெரசா, ஜெபமாலை, மரியம் பிலோ, ஆரோக்கியம், சி.என்.ஐ. பொதுச் செயலாளர் பால் தயாநிதி, அமைப்பு செயலாளர்

எம். நிக்சன், கொள்கை பரப்பு செயலாளர் ஜான் பிரகாஷ், சாலமன், அயனாவரம் தேவாலயம் பேராயர் பிரான்கோ, பேராயர் ஐசக், அருட்தந்தை மேத்யூ, எபி உள்ளிட்ட பல்வேறு திருச்சபை நிர்வாகி கள் சந்தித்த போது, முதலமைச்சர் அவர்கள் பேராயர்கள், அருட்தந்தைகள் மற்றும் அருட்சகோதரிகளுக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரிவித்தார்.

மேலும், கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன் மற்றும் அவரது மகன் வழக்கறிஞர் ரிச்சர்ட்சன் வில்சன், சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் அ. அசோகன், வி.ஜி.பி. குழும தலைவர் வி.ஜி.சந்தோசம்,

மேலாண்மை இயக்குநர் வி.ஜி.பி. ரவிதாஸ், முதுநிலை இயக்குநர் வி.ஜி.பி. ராஜாதாஸ், ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரி ஸ்டெல்லா மேரி மற்றும் செயலாளர் அருட்சகோதரி ஜூடித் அனிதா, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர் அருட்தந்தை எம். ஆரோக்கியராஜ் ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்த போது, அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, சட்டமன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ், முனைவர் நல்லி குப்புசாமி ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை குத்தாலம் பி.கல்யாணம் தனது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப்பெற்றார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.

2,553 மருத்துவப் பணியிடங்களுக்கான தேர்வு!

# 1,000 இடங்களில் மக்கள் மருந்தகம் விரைவில் தொடங்கப்படும்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

சென்னை, டிச.25-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (23.12.2024) சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக வெள்ளி விழா கலையரங்கத்தில் நடைபெற்ற தேசிய மருந்தாளுநர் மாநாட்டில் அறிவியல் மலரினை வெளியிட்டார். பிறகு சிறந்த மருந்தாளுநர்களுக்கும், மருத்துவம் சார்ந்த பல்வேறு துறையில் உள்ள மருத்துவ வல்லுநர்களுக்கும் மற்றும் மருந்தியல் மாணவர்களுக்கும் பதக்கங்களையும், சான்றிதழ்களும் வழங்கினார்.

பின்பு, அமைச்சர் தனது உரையில் தெரிவித்ததாவது:-

**தேசிய மருந்தாளுநர் மாநாடு!**

தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் இந்தியாவிலேயே முதன்முறையாக உலகின் பல்வேறு நாடுகளை ஒருங்கிணைத்து, உலகின் பல்வேறு மருத்துவ வல்லுநர்களை அறிவியல் ஆய்வாளர்களை ஒருங்கிணைத்து மிகப்பெரிய மருத்துவ மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாடு இது வரை இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் நடத்தப்பட்டதில்லை. '

முதன்முறையாக தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மரு. நாராயணசாமி முன்னெடுப்பில் நடத்தப்பட்ட இம்மருத்துவ மாநாடு மிகப் பெரிய அளவில் வெற்றி பெற்ற மாநாடாக அமைந்தது. அதேபோல் இதே இடத்தில் International Ayurveda Conference ஒன்று ஏற்கனவே மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. ஆயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்று அவரவர்களுடைய ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்து அம்மாநாடு மிகப்பெரிய வெற்றியினைப் பெற்றது.

அதேபோல் National



Dental Work shop ஒன்று கடந்த மாதம் இதே அரங்கில் நடைபெற்றது. தேசிய அளவில் பல் மருத்துவம் குறித்து மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள் மூலம் அந்த மாநாடும் மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்ற மாநாடாக அமைந்தது. இன்று மருந்தியல் துறையின் தேசிய மாநாடு தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 1500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், மருத்துவத்துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள் பங்கேற்றிருக்கும் இம்மாநாடு மிகப்பெரிய அளவில் வெற்றியினை பெரும்.

இந்த மாநாட்டில் 200க்கும் மேற்பட்ட மருந்தியில் ஆய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை எனது மனம் கனிந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய புதிய மருந்து கண்டுபிடிகள் அரிதான நோய்களை குணப்படுத்துகிறது, புதிய புதிய மருந்து கண்டுபிடிப்புகளின் ஆராய்ச்சி தொடர்ச்சியாக எடுக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. புதிய நோய் பாதிப்புகள் இன்று உலகை அச்சுறுத்தி வருகிறது, 200 நாடுகளுக்கும் மேல் இந்திய மருந்து 100 சதவீதம் போய் உள்ளது, இந்திய மருந்துகளின் தேவை அதிகரித்து உள்ளது, உலகத்திற்கு எடுத்துகாட்டாக மருந்து துறையில் இந்தியா உள்ளது, அமெரிக்காவில் கூட பொது மருத்துவத்தின் (Generic Medicine) 40% மருந்துகள் இந்தியாவில் தான் வாங்கப்படுகிறது. மேலும் ஐரோப்பிய நாடுகளில் இந்திய மருந்துகள் 30% அளவில் உபயோக்கப்படுத்தப்பட்டு வருகின்றனர். முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப, இந்தியாவின் மற்ற மாநிலங்கள் தற்போது தமிழ்நாட்டின் மருத்துவ திட்டத்தை நகல் எடுக்க தொடங்கி உள்ளனர், மற்ற நாடுகளிலும் தமிழ்நாட்டின் மருத்துவ முறையை முன்னெடுக்க முனைந்துள்ளார்கள்.

**திட்டங்கள்!**

இந்த அரசு பொறுப்பேற்றபிறகு மருத்துவத்துறையில் பல திட்டங்களை செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48, இதயம் காப்போம், சிறுநீரக பாதுகாப்பு திட்டம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம், பாதம் பாதுகாப்போம் திட்டம், நடப்போம் நலம் பெறுவோம் திட்டம், ஒட்டுமொத்த மக்களுக்கும் புற்றுநோய் Screening திட்டம் என்று ஏராளமான திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழ்நாட்டில் அரசு பார்மஸி கல்லூரிகள் எண்ணிக்கை உயர்த்துவது!**

ஐநாவில் தொற்றா நோய்க்கான சிறந்த மருந்தை கொடுக்கும் மாநிலம் என தமிழ்நாட்டை கண்டறிந்து விருது வழங்கப்பட்டது, இது உலகின் உச்சபட்ச விருது. தொற்றா நோய் பாதிப்பு தமிழ்நாட்டில் கட்டுக்குள் உள்ளது, பெரிய உயிர் இழுப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளது. முதல் பார்மஸி கல்லூரி தொடங்கிய மாநிலம் தமிழ்நாடு தான். இன்று படித்த மாணவர்கள் உலகத்தில் சாதனை புரிந்து வலம் வருகின்றனர். தமிழ்நாட்டில் அரசு பார்மஸி கல்லூரிகளின் எண்ணிக்கை மிக குறைவாக உள்ள காரணத்தினால் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, பார்மஸி கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அரசு கல்லூரிகளில் படித்த எனக்கு அரசு தான் வேலை தர வேண்டும் என மனப் போக்கு மாணவர்களிடையே உள்ளது, அது தவறில்லை, ஏராளமான தனியார் வேலை வாய்ப்புகள் உள்ளது. அதனையும் மாணவர்கள் தேர்வு செய்ய வேண்டும். தற்போது படிக்கும் மருத்துவ மாணவர்களின் தகுதி, திறமையை கொண்டு படிப்பை முடித்த பின் அவர்களுக்கான காலி பணியிடங்கள் விரைவாக நிரப்பப்படும்.

அண்மையில் 946 மருந்தாளுநர் பணியிடங்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இது வரை இல்லாத வகையில் அனைவருக்கும் கலந்தாய்வு நடத்தி அவரவர் விரும்பும் இடங்களுக்கே பணி ஆணைகள் தரப்பட்டது. இதுவே முதல்முறை ஆகும். இந்த அரசு பொறுப்பேற்றபிறகு 24,000 மருத்துவம் சார்ந்த பணிநியமனங்கள் முறையாக நடைபெற்றிருக்கிறது. மேலும் கலந்தாய்வு மூலம் 34,000த்திற்கும் மேற்பட்ட பணியிடமாறுதல்கள் வழங்கப்பட்டுள்ளது. வரும் 05.01.2025 அன்று 2,553 மருத்துவர் காலிப்பணியிடங்களுக்கு ஆன்லைன் மூலம் தேர்வு நடைபெற இருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தன்று மக்கள் மருந்தகம் தமிழ்நாட்டில் 1000 இடங்களில் தொடங்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். எனவே மக்கள் மருந்தகத்திற்கு தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் மூலம் 220 Generic மருந்துகள் கொள்முதல் செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மிக விரைவில் அப்பணிகள் முடிவுற்றபிறகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டில் 1000 மக்கள் மருந்தகங்கள் கூட்டுறவு த்துறையும், மக்கள் நல்வாழ்வுத் துறையும் ஒருங்கிணைந்து இச்சேவை தொடங்கப்பட விருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் விழா பேருரையாற்றினார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மரு.கே.நாராயணசாமி, பதிவாளர் மரு.கே.சிவசங்கீதா, இந்திய மருந்தியல் கழகத்தின் (Indian Pharmaceutical Association) தலைவர் மரு.எஸ்.மணிவண்ணன், துணை தலைவர் ஜெ. ஜெயசீலன், மருந்தியியல் கல்லூரியின் முதல்வர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் துணை முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் வழிகாட்டுதலின்படி இந்திய அரசியலமைப்பு சட்டத்தை வடிவமைத்த சட்டமேதை, புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து கமுதி வடக்கு ஒன்றிய திராவிட முன்னேற்றக்கழகம் சார்பில் கமுதி பேருந்து நிலையம் முன்பு வி.வாசுதேவன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கமுதி வடக்கு ஒன்றிய செயலாளர் வி.வாசுதேவன், ஒன்றிய துணை தலைவர் அய்யனார், கமுதி பேரூர் கழகச் செயலாளர் பாலமுருகன் மற்றும் மணிராமகிருஷ்ணன் பாரதி உட்பட கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கல்வி உரிமைச் சட்டத்தில் ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள திருத்தங்களால்

# தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தேர்ச்சி முறையில் எந்த மாற்றமும் கிடையாது!

## பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விளக்கம்!

*சென்னை, டிச. 25 -*

*"கல்வி உரிமைச் சட்டத்தில் ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள திருத்தங்களால் தமிழ்நாட்டுப் பள்ளிகளின் தேர்ச்சி முறையில் எந்த மாற்றமும் கிடையாது; தற்போதைய தேர்ச்சி முறையே தொடரும் என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விளக்கம் அளித்துள்ளார்.*

அவரது அறிக்கை வருமாறு: -

தமிழ்நாட்டில் அனைத்துப் பள்ளிக் குழந்தைகளும் தொடர்ந்து தடையின்றி கல்வி பயின்றிட ஏதுவாக, எட்டாம் வகுப்பு வரை கட்டாயத் தேர்ச்சி வழங்கப்படும் முறை தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், கல்வி உரிமைச் சட்டத்தின் விதிகளைத் திருத்தம் செய்து, ஐந்து மற்றும் எட்டாம் வகுப்பு தேர்வுகளில் தேர்ச்சி பெறாத குழந்தைகளுக்கு இரண்டு மாதங்களில் மறுதேர்வு முறையையும், அதிலும் தேர்ச்சி பெறாத குழந்தைகள் அதே



வகுப்பில் ஓராண்டு பயில வேண்டும் என்ற முறையையும் ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ளது. தேசிய கல்விக் கொள்கையைப் பின்பற்றி நடத்தப்படும் ஒன்றிய அரசுப் பள்ளிகளுக்கு, இந்தப் புதிய நடைமுறை பொருந்தும் எனவும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள், தடையின்றி எட்டாம் வகுப்பு வரை கல்வி பெறுவதில், ஒரு பெரிய தடைக்கல்லை ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை ஏற்படுத்தியுள்ளது உண்மையிலேயே வருந்தத்தக்கது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, தேசியக் கல்விக் கொள்கையைப் பின்பற்றாமல், நமது மாநிலத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, சிறந்த கல்வியாளர்களை ஒருங்கிணைத்து, ஒரு புதிய மாநிலக் கல்விக் கொள்கையை உருவாக்குவதற்காக, நமது அரசு தொடங்கிய பணிகள் நிறைவுறும் தருவாயில் உள்ளன. தமிழ்நாட்டில், மாநிலக் கல்விக் கொள்கை தொடர்ந்து பின்பற்றப்படும் சூழ்நிலையில், ஒன்றிய அரசின் இத்தகைய நடவடிக்கைகள் எதுவும் தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் ஒன்றிய அரசுப் பள்ளிகளைத் தவிர பிற பள்ளிகளுக்குப் பொருந்தாது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். எனவே, தமிழ்நாட்டில் உள்ள பெற்றோர்களும், மாணவர்களும், ஆசிரியர்களும், கல்வியாளர்களும் ஒன்றிய அரசின் கல்வி உரிமைச் சட்ட விதிகள் குறித்து எந்தவகையிலும் குழப்பமடையத் தேவையில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தற்போதுள்ள தேர்ச்சி நடைமுறையே தொடரும் என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்ட தைப் போல, ஒரு தலைமுறையில் பெறக்கூடிய கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறை களுக்கும் பாதுகாப்பாக அமையும். கல்வி தான் ஒரு சமூகத்தின் எதிர்காலத்தின் அடித்தளம். எனவே, மாணவர்கள் மகிழ்ச்சியோடும், பாதுகாப்போடும் கல்வி கற்பதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவது தான் திராவிட மாடல் அரசின் இலக்கு. இந்த இலக்கை எய்தி, இந்தியத் துணைக் கண்டத்திற்கே, தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் தொடர்ந்து விளங்கும். அதற்கான அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து தொய்வின்றி, நமது அரசு முன்னெடுத்துச் செல்லும்.

இவ்வாறு அவ்வறிக்கையில் - பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.

பொங்கல் திருநாளில் தேர்வுகள் நடத்துவதா?

# தேசிய தேர்வு முகமை நடத்தும் யு.ஜி.சி. நெட் தேர்வு தேதிகளை மாற்றிடுக!

## அமைச்சர் முனைவர் கோவி. செழியன் - ஒன்றிய கல்வி அமைச்சருக்கு கடிதம்!

**சென்னை, டிச. 25 –**

**ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய தேர்வு முகமை (NTA) அதன் UGC NET தேர்வை பொங்கல் திருநாள் நாட்களில் நடத்தப்படுவதை மாற்றியமைத்திட வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ஒன்றிய கல்வி அமைச்சர் அவர்களுக்கு உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் கடிதம் எழுதியுள்ளார்.**

இக்கடிதத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளதாவது:

ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய தேர்வு முகமை (NTA) அதன் UGC - NET தேர்வை 3 ஜனவரி 2025 முதல் 16 ஜனவரி 2025 வரை நடத்தஅறிவித்துள்ளது.

உலகம் முழுவதும் உள்ள அனைத்துத் தமிழ் சமுதாய மக்களாலும் கொண்டாடப்படும்விழா பொங்கல் திருநாள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த விழா ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 13 முதல் ஜனவரி 16 வரை நான்கு நாட்கள் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு 2025, 13 ஆம் தேதி போகி பண்டிகையும், 14 ஆம் தேதி பொங்கல் (தமிழ்ப் புத்தாண்டு) பண்டிகையும், ஜனவரி 15 ஆம் தேதி திருவள்ளுவர் தினமாகவும் (மாட்டுப் பொங்கல்) ஜனவரி 16 ஆம் தேதிஉழவர் திருநாள் / காணும் பொங்கலாகவும் கொண்டாடப்படுகிறது.

இந்த நான்கு நாட்களும் உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் பொங்கல் திருநாளை உற்சாகத்துடன் கொண்டாடி மகிழ்வார்கள். இந்த விழாவை முன்னிட்டு தமிழக அரசு ஏற்கனவே 2025 ஜனவரி 14 முதல் 16 வரை விடுமுறை அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டு விவசாயிகளின் உணர்வார்ந்த திருநாளாகக் கொண் டாடப்படும் பொங்கல் ஒரு பண்டிகை மட்டுமல்ல, 3,000 ஆண்டுகளுக்கும் மேலான



தமிழர்களின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் அடையாளமாகும்.

பொங்கல் திருநாளைப் போலவே ஆந்திரா மற்றும் தெலுங்கானாவிலும் மகர சங்கராந்தி விழா ஜனவரி மாதத்தில் கொண்டாடப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொங்கல் விடுமுறை நாட்களில் நெட் தேர்வு நடத்தப்பட்டால், மாணாக்கர்கள் இத்தேர்வுக்கு தயாராவதற்கும் எழுது வதற்கும் தடை ஏற்படும்.

மக்களவை உறுப்பினர் சு.வெங்கடேசன் விடுத்த வேண்டு கோளின்படி, பொங்கல் திருநாளை முன்னிட்டு, ஜனவரி 2025க்கான பட்டயக் கணக்காளர்கள் அறக்கட்டளைத் தேர்வு மாற்றியமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

எனவே, தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் உள்ள மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் பாதிக்கப்படுவதை தவிர்த்திடும் வகையில் பொங்கல் திருநாள் விடுமுறை நாட்களில்நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள யுஜிசி நெட் தேர்வு மற்றும் பிற தேர்வுகளை வேறு தேதிகளில் நடத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு, ஒன்றிய கல்வி அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகா சூராணம் புனித ஜேம்ஸ் உயர் நிலைப் பள்ளியில் கிறிஸ்துமஸ் விழா திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இதில் முன்னாள் எம்.எல்.ஏ சுப.மதியரசன், கிழக்கு ஒன்றிய செயலாளர் வே.தமிழ்மாறன், பள்ளி தாளாளர் மார்ட்டின் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் நினைவு நாளையொட்டி பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் அன்னாரது திருவுருவப்படத்திற்கு பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, பொதுக்குழு உறுப்பினர் எஸ்.எம்.டி. அருளானந்து, நயினார்கோவில் ராமபாண்டி மற்றும் நகர் மீனவரணி நெடுமாறன் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கனிமொழி துரைமுருகன், பிரபா சாலமன், மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.